**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் - 2015**

---

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிய வள அதிகாரச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்பத் தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அனுசரணையாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிரயாம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 01**

நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடைக்கான ஒதுக்கங்களை வெளிப்படுத்துகையில் ஓய்வு பெறும் வயதைக் கடந்த ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணிக்கொடை நடைமுறைப் பொறுப்பாகவும், எஞ்சிய தொகை நடைமுறையல்லா பொறுப்புக்களாகவும் நிரூபணப்படுத்துவதற்குப் பதிலாக மொத்தப் பணிக்கொடை ஒதுக்கமான ரூபா 125,128,193 நடைமுறையல்லாத பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07**

சொத்துக்கள், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள் என்பவற்றை மீள் மதிப்பீடு செய்யும் போது குறித்த சொத்து தொகுதியும் மீள்மதிப்பிடப்பட்ட வேண்டும். எனினும், அதற்கு முரணாக தற்போது பயன்படுத்தப்படும் முன் கொண்டு செல்லும் பூஜ்ஜியமாகிய சொத்துக்கள் மாத்திரமே மீள் மதிப்பிடப்பட்டு அதன் மூலதன இலாபமாகிய ரூபா 26,361,994 திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

**2.2.2 தொடர்புடைய நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை**

பணியகத்துக்கு 66 சதவீத உரித்துடைய இணைந்த நிறுவனத்தினது 105 ஊழியர்கள் வாடகை அடிப்படையில் அமர்த்தப்பட்டு அக் கம்பனிக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 37,344,658 கொடுப்பனவும் பணியக வளாகத்தினுள் அந்நிறுவனத்தை நடாத்திச் செல்ல இடமளித்ததற்காக பெறப்பட்ட ரூபா 1,230,325 வருமானம் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் கொள்கை**

அபிவிருத்திக் கிரயத்தைக் கணக்கிலிடுவதற்குத் தகுதியானதொரு கணக்கீட்டுக் கொள்கை அறிமுகஞ் செய்யப்படாதிருந்ததுடன் முறைமையை ஆய்வு செய்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,505,000 தொகை நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையாக காட்டப்பட்டிருந்தது.

**2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்களை இனங்காணும்போது சொத்துக்களின் பாவனைக் காலம் இனங்காணப்பட்டிருக்காமையால், முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட ரூபா 10,687,383 பெறுமதியுடைய நுகர்வுப் பொருட்கள் தொடர்ந்தும் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) சேவை வழங்குநருக்காகக் கொள்வனவு செய்யப்பட்டு அவர்களால் மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 2,046,540 பெறுமதியான சொத்துகள் பணியகத்தின் சொத்துகளாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(இ) ஊழியர்களது நலன்புரிக்காக மானியமாகப் பெறப்பட்ட ரூபா 1,321,648 ஊழியர்களது நலனோம்பலுக்காகப் பேணப்படும் நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், உள்ளூர் மானியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) பணியகத்தால் ரூபா 130,476,703 கொடுப்பனவு செய்யப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்ட ஒறுகொடவத்தையில் உள்ள காணி அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபையால் சுவீகரிக்கப்பட்டிருக்கையில் நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் நடைமுறையல்லா சொத்தாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,312,205 பெறுமதியான பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கும் ரூபா 4,218,727 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதியைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | குறித்த அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 231,784,375 கூட்டுத்தொகையான பணம் திறைசேரி உண்டியல்களிலும் ரூபா 823,562,324 கூட்டுத்தொகையான பணம் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியினது 6(2)(அ) பந்தி | ஒரு மாதத்திற்கான மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின்போது உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 609,070 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தினது 10 ஆம் பிரிவு மற்றும் 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 142 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கை | மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு இடர் கடன் செலுத்தப்பட வேண்டுமெனினும், படியை உள்ளடக்கிய மாதாந்த மொத்தச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 250,000 இனை விஞ்சி இடர் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், |

| | | |
|---|---|---|
| | | அதற்கமைய கொடுப்பனவு செய்யக்கூடிய தொகையை விஞ்சி ரூபா 9,053,927 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | XXX அத்தியாயத்தினது 1.4 மற்றும் 1.4.1 ஆம் பிரிவுகள் | செயலாளரின் அனுமதியின்றி 3 உத்தியோகத்தர்கள் பணியகத்துடன் இணைந்த நிறுவனம் ஒன்றிற்குத் தொழில்சார் சேவைகளை வழங்கி மீளாய்வாண்டின்போது ரூபா 1,969,500 சம்பாதித்திருந்த போதிலும், தாபனக் கோவை ஏற்பாடுகளுக்கு அமைய அரசிறையை வழங்கத் தவறியிருந்தார். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | நிதிப்பிரமாணம் 104(2) | மீளாய்வாண்டின்போது பணியகத்தில் ஏற்பட்ட 13 வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (உ) | 2010 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சினது சுற்றறிக்கையின் 6(iii) ஆம் பிரிவு | நிர்ணயிக்கப்பட்ட கூட்டிணைந்த படிக்கு மேலதிகமாக 9 பணியக உத்தியோகத்தர்களுக்கு ரூபா 469,300 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 1996 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய பீஈ1/000/6 ஆம் இலக்கத் திறைசேரிக் கடிதம் | ஊக்குவிப்புப்படி வழங்கப்படுவதற்கு புவிச்சரிதவியல் மற்றும் கனிய ஆய்வுகள் மூலம் பெறப்படும் நிகர சம்பாத்தியம் மாத்திரமே பயன்படுத்தப்பட முடியுமாயினும், பரிசோதனைக் கட்டணம் மற்றும் பரிசோதனை வெடிப்புக் கட்டணமாகிய ரூபா 144,724,836 வருமானமும் ஊக்குவிப்புப்படிக் கொடுப்பனவிற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| (எ) | 2015 செப்டெம்பர் 10 ஆந் திகதிய செலவினக் கட்டுப்பாட்டு அனுமதி வழங்கும் கடிதத்தின் 2(பீ) 4 மற்றும் 5 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டு ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்ட விசேட அந்நியச் செலாவணிக் கணக்கிலிருந்து உள்ளூர்க் கொடுப்பனவுகள் இலங்கை நாணயத்தில் வழங்கப்பட வேண்டியபோதும் அதற்கு முரணாக, உள்ளூர் நிறுவனம் ஒன்றிற்கு 105,402 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அக் கணக்கை 2016 ஜனவரி 14 வரை மாத்திரம் பேணலாம் என செலவாணிக் கட்டுப்பாட்டாளர் அனுமதி வழங்கியிருந்த போதும், கணக்காய்வுத் தினமான 2016 மே மாதமளவிலும் கணக்கு பேணப்பட்டிருந்தது. மேலும், அக் கணக்கினது விபரம் மற்றும் அதற்குரிய கொடுப்பனவுகள் பற்றிய விபரம் என்பவற்றைச் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பணியகத்தின் நிதி விளைவு ரூபா 1,037,093,870 ஆன இலாபமொன்றானதுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 826,918,428 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதி விளைவுகளில் ரூபா 210,175,442 அதிகரிப்பு தென்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு அரசிறை வருமானம் ரூபா 159,831,410 மற்றும் பரீசீலனைக் கட்டண வருமானம் ரூபா 42,431,093 இனால் அதிகரித்தமை ஆகியன பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

முன்னைய ஆண்டுகளது நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் இலாபத்திலான குறைவொன்று தென்பட்ட போதும், 2013 முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான இலாப அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. ஊழியர் ஊதியம், அரச வரி மற்றும் தேய்மானம் என்பவற்றைக் கருத்திற்கொள்ளுமிடத்து பணியகத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டில் ரூபா 821,150,804 ஆக இருந்ததுடன், 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,547,924,501 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட சட்டரீதியான நிகழ்வுகள்

பணியகத்திற்கு எதிராக வெளி நபர்களால் 13 வழக்குகளும், பணியகத்தால் வெளி நபர்களுக்கு எதிராக 02 வழக்குகளும் தொடுக்கப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கனிப்பொருள் ஆய்வு, சுரங்க அகழ்வு, அவற்றைக் கொண்டு செல்லுதல், தயாரித்தல், விற்பனை செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் பணியகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

(அ) பணியகத்தின் பணிகளில் புவிச்சரிதவியல் வரை படிவத்தைத் தயாரித்தல், கனிப்பொருள் வளங்களை இனங்காணுதல் மற்றும் அவற்றை மதிப்பிடல் நடவடிக்கைகளது முன்னேற்றம் மந்தமாக இருந்ததுடன், சுரங்க அகழ்வின் வணிக ரீதியான சாத்தியக்கூறு தொடர்பாக மதிப்பாய்வு மற்றும் கனிப்பொருள் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி, வணிக ரீதியாகக் கனிப்பொருளை அகழ்ந்தெடுத்தலும் உற்பத்தி செய்தலும் மேம்படுத்துவதற்குமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற பணிகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட 1:50,000 புவிச்சரிதவியல் இரசாயன வரைபட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வவுனியா, பான்குளம், மஹாஓயா, றக்வானை, தங்காலை பிரதேசங்களில் எதுவித செயற்பாடுகளும் இடம்பெறவில்லை. மேலும், மாகாண கனிப்பொருள் மெய்மையாய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சபரகமுவ மாகாணத்தில் எதுவித செயற்பாடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அரசிறையை அறவிடல்**

(i) நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வெடிப்பொருள் கட்டுப்பாட்டு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அரசிறையைக் கணித்தல் காரணமாக கருங்கல் அகழ்வுகளுக்காக குறிப்பிடத்தக்க அரசிறை இழப்பிற்குள்ளாகும் ஆபத்து நிலவுவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக அகழ்வுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதற்குரிய சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதிகமாக அகழ்ந்தெடுக்கப்பட்ட அளவுக்கு அரசிறையை அறவிடுவதற்குப் பொருத்தமான விதிமுறைகளைத் தயாரித்தல் என்பன தொடர்பாகப் பணியகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iii) பணியகம் கனிப்பொருட்களின் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் அரசிறையைக் கணிப்பிட்டபோதும், 2011 ஆம் ஆண்டின் பின்னர் அப் பெறுமதிகள் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொண்டிருக்கவில்லை.

**(ஆ) அனுமதிப் பத்திரங்களை வழங்குதலும் கட்டணங்களை அறவிடலும்**

(i) அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்குத் தேவையான விதந்துரைகளை முன்வைப்பதற்கு முன்னர் விண்ணப்பத்துடன் அனுமதிப் பத்திரத்திற்குரிய முழுக் கட்டணமும் அதற்குரிய பெறுமதி சேர் வரியும் முத்திரைக் கட்டணமும் அறவிடப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக அனுமதிப்பத்திரத்தின் மூலம் அகழ்ந்தெடுக்கப்படும் கனிப்பொருளின் அளவின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய அரசிறையின் பொருட்டு முற்பணம் அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, அனுமதிப்பத்திரம் வழங்கப்பட முடியாத விண்ணப்பப் படிவங்களுக்குரிய பெருமளவு தொகை பணியகத்தில் நிரந்தரமாகவே திரண்டவாறிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டு முடிவில் முற்பண மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 111,348,683 ஆக இருந்தது.

(ii) சட்டவிரோத அகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்குச் சுற்றிவளைப்பு பிரிவு ஒன்றை ஸ்தாபிக்காமையால் நாடாளவிய ரீதியில் தொடர்ந்தும் அத்து மீறிய அகழ்வுகள் இடம் பெறுகின்ற போதிலும், அதற்கெதிராக சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குப் பணியகம் தவறியிருந்தது.

(இ) அகழ்வுகள் மேற்கொள்ளப்படும் காணிகளைப் புனரமைப்பதற்குப் பெறப்படும் வங்கிப் பிணை முறிகளது பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு நிச்சயமானதொரு நடைமுறை காணப்படவில்லை.

(ஈ) பல்வேறு நாடுகளது 13 புவிச்சரிதவியலாளர்களது சங்கங்கள் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் விஞ்ஞானபூர்வ சஞ்சிகையைக் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 3,633,770 செலவிடப்பட்டிருந்தது. குறித்தவொரு ஆண்டிற்கான சஞ்சிகையை அவ்வாண்டிலேயே கொள்வனவு செய்யாது நெடுங்காலம் கழிந்ததன் பின்னர் அவற்றைக் கொள்வனவு செய்ததையடுத்து நிறுவனம் அதன் மூலம் பெறும் பயன்யாது என்பது கணக்காய்வில் உறுதிசெய்யப்பட முடியாதிருந்தது.

(உ) யக்கல களஞ்சியத்தின் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சிபார்சுகளை அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை கட்டுப்பாட்டுச் சபை

மேற்கொள்ளாததுடன், 412 வகைப் பொருட்களின் 9925 கூறுகளது பற்றாக்குறையை மதிப்பீடு செய்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) புவிச்சரிதவியல் செயற்திட்டங்களுக்குச் சேவை வழங்குநர்களைப் பெறுவதற்கு முறையான நடைமுறைகள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், நிறுவன ரீதியாக செயற்திட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கான மேம்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் புவிச்சரிதவியல் செயற்திட்ட வருமானம் ஏறக்குறைய 27 சதவீதம் குறைந்திருந்தது.

(எ) பூகம்ப அளவைக் கோபுரங்களைப் பேணுவதற்கு 2000 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தில் மீளாய்வாண்டில் ரூபா 6,887,885 பணியகத்தில் சேர்ந்திருந்தது. இதனைக் குறித்த தரப்பினருக்கு வழங்குவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சர்வதேச அணுக் கட்டுப்பாட்டு ஸ்தாபனம் (CTBTO) சம்மேளனம் ஒன்றின் உள்ளூர் அனுசரணையைப் பணியகம் மேற்கொண்டிருந்தது. ஹோட்டல் வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய வழங்கல் நடவடிக்கைகளை வெளிப்படையாக மேற்கொள்ளாததுடன், கூறு விலைகளைச் சமர்ப்பித்திருந்த இரு நிறுவனங்களும் இருக்கின்றனவா என்பதைப் பணியகத்தால் உறுதி செய்ய முடியாதிருந்தது. மேலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறு விலைகளை விஞ்சி ரூபா 284,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்லேகல பூகம்ப அளவைக் கோபுரப் பராமரிப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணாக நானாவித உள்ளூர் வரி வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிலிருந்து ரூபா 215,372 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது ஊக்குவிப்புப் படியாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 56,915,835 தொகை கணிப்பீட்டிற்காக தனியார் துறைக் கணக்காய்வு நிறுவனம் ஒன்றினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கொன்று பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் இலாபானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட செயற்திட்ட இலாபத்தை விட ரூபா 31,951,689 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், பெற வேண்டிய வருமானமாக உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 8,973,399 தொகை 2016 ஏப்ரல் மாதமளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பணியகத்தில் கடமையாற்றாத இரு ஊழியர்கள் வெளிநாட்டுப் பயிற்சிக்காக அனுப்பி வைப்பதற்காக கூட்டிணைந்த படிகள் மற்றும் ஏனைய செலவினமாகப் பணியகம் செலவழித்திருந்த தொகை ரூபா 953,258 ஆகும்.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் 4 உத்தியோகத்தர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்று பின்னர் உடன்படிக்கைப் பிரகாரம் கட்டாயமாகப் பணியாற்ற வேண்டிய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாது பணியகத்திலிருந்து நீங்கியமையால், அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டனைப் பணமும் ஏனைய செலவுகளுமான ரூபா 2,921,783 தொகையை அறவிடுவதற்குப் பணியகம் தவறியிருந்தது.

(ஆ) புதிய பதவியணியும் நிறுவன கட்டமைப்பும் 2013 ஜுன் 28 ஆந் திகதியன்று முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெறாததால் பழைய ஆட்சேர்ப்பு நடைமுறையின் அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன.

### 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஒருவரால் பெறப்பட்ட ரூபா 597,231 பெறுமதியான உபகரணங்களைத் திருப்பி ஒப்படைக்கப்பட்டிராததுடன் அந் நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### 4.6 முறைப்படி சுவீகரிக்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

காணியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மற்றும் நிர்மாணங்களின் உரித்து குத்தகைக் கால முடிவில் குத்தகை வழங்கியவருக்கு உரித்துடையாவதுடன் அது தொடர்பாக எதுவித கொடுப்பனவையும் குத்தகை பெற்றவர் பெறுவதற்கு உரித்துடையவர் அல்ல என்பது குறிப்பிடப்பட்டிருந்தும் பணியகம் குத்தகைக்குப் பெற்றிந்த காணி ஒன்றில் ரூபா 46,035,957 செலவில் இரு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வு பணிக்குப் பணியகத்தின் தலைவருக்குப் பொறுப்பளிக்க வேண்டிய கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதும், அவருக்கு உதவியளிப்பதற்கு நிரந்தர கணக்காய்வுப் பதவியணி நியமிக்கப்படாததுடன், கணக்காய்வாளரின் கணக்காய்வு தொடர்பாக தொழில்சார் அறிவுத்திறனை மேம்படுத்துவதற்குப் போதுமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆறு உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய பிரிவுகளால் பதில் வழங்கப்பட்டிராததுடன் கணக்காய்வில் வெளிப்படுத்தப்படுபவை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளது செயல்முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு ஒழுங்கான வேலைத் திட்டமொன்றினை காணமுடியாதிருந்தது.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

இலங்கை காணி நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்திற்கு கடல் மணலை அகழ்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் தொடர்பாக 2013, 2014 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டிய ரூபா 44,727,062 அரசிறைக் கட்டணமும் தண்டப் பணமும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறே, அந் நிறுவனத்தினது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 2,269,563 கன மீட்டர் மணல் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 100 மில்லியனுக்கும் மேற்பட்ட அரசிறையை அறிவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றை உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடப்பட்ட போது 16 முதல் 4812 சதவீதம் வரையிலான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது

ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 5.4 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2016 மே மாதமளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணியகதின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கையிருப்பை நேரடியாகச் மெய்மையாய்வு செய்து கணக்கிடாமை |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்காததுடன் முறைப்படி ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருக்கவில்லை. |
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | பொருட்களைக் களஞ்சியத்தில் பொறுப்பேற்காது நேரடியாகக் குறித்த பிரிவுகளுக்கு வழங்குதல் |
| (ஈ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | வெளிநாட்டு நன்கொடை உபகரணங்களை மீள மதிப்பீடு செய்து கணக்கிலிடாமை. |
| (உ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) களக் கடமைகளுக்கான பயணங்களை உறுதி செய்யாமை<br>(ii) பயணங்களை உறுதி செய்யாது எரிபொருள் செலவை வழங்குதல்<br>(iii) சட்டவிரோத அகழ்வுகள், அனுமதிப்பத்திர நிபந்தனைகள் மீறுதல் சம்பந்தமாகப் பரிசீலனை அறிக்கைகளின் மூலம் புலப்படுத்தாமை |
| (ஊ) | அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | (i) சுற்றாடல் தீர்வுச் சான்றிதழ் பெறப்படாது அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்<br>(ii) அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவடைதல்<br>(iii) போலியான கையெழுத்துகளின் அடிப்படையில் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான பதிவேடு ஒன்றைப் பேணாமையும் |